# களம் உன்னிடம்; காலங் கருதி கருத்தாய் வடிவம் தந்தாய் தலைவா; வாழ்க, நீ வாழ்க!

திருகுர்ஆனிலே, 'தீயதும் நல்லதும் சமமாகா' 'அல்லாஹ் எத்தகையவன் என்றால் வானங்களை தூணின்றியே உயர்த்தி உள்ளான்; நீங்கள் பார்க்கிறீர்கள்' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது இஸ்லாத்தின் மறைமொழி, 2026 ஏப்.23 தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு இம்மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து எண்ணத் தோன்றுகிறது. சிலரை ஆசைகள் வெட்கமறியாமல் பேசச் செய்துவிடுகிறது. அப்போதெல்லாம் இப்படிப்பட்ட மொழிகள் நமக்கு ஒத்தடம் கொடுக்கின்றன. எண்ணிப்பார்க்க வைக்கின்றன.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க, த.வெ.க.களத்தில் நின்றன. நம்மைப் பொருத்தவரை தி.மு.க.–அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கே போட்டி என்று கருதினோம். ஆனால் நிலைமை வேறு மாதிரியாக இருந்தது. தி.மு.க. ஆளுங்கட்சி அ.தி.மு.க. எதிர்க்கட்சி, த.வெ.க. புத்தம் புதிய கட்சி; அப்போதுதான் பிறந்த குழந்தை மாதிரி! எங்கள் தொண்டை மண்டல கிராமப் பகுதிகளில், 'அச்சமான ஊர்ல ஒரு ஆம்பிளைப் புள்ளைப் பொறந்ததாம்; அது தொப்புள் அறுக்கிறதுக்கு முன்னாடி கப்பல் ஏறிப் போச்சாம்' என்று சொல்வார்கள். அப்படித் தோன்றிய த.வெ.க, தி.மு.க.–அ.தி.மு.கவைவிட அதிக இடங்களைப் பிடித்தது. ஆனால் அவை தனித்த பெரும்பான்மையைப் பெறவில்லை.

அதிக இடங்களைத் த.வெ.க. பிடித்தது. ஆனால் ஆட்சி அமைக்கிற விதத்தில் பெரும்பான்மைப் பெறவில்லை. இதனால் ஒரு குழப்பமான நிலை உருவானது. பொறுப்பு ஆளுநர் சரிவர வழிகாட்டுதல்களை மேற்கொள்ளவில்லை. த.வெ.க. ஆடிப்போனது. அதிர்ச்சி அடைந்தது. ஆளுநர் மாளிகைக்கு பலமுறை படையெடுத்தனர். இந்நிலையில், தி.மு.க. அணியிலிருந்த காங்கிரஸ், த.வெ.கவை எதிர்த்து வாக்குகளைப் பெற்று அங்கேபோய் சரணடைந்தது. அண்ணா அறிவாலயத்தில் விருந்து சாப்பிட்டுவிட்டு பனையூரில் கைகழுவியது. நிலைமைகளை நின்று நிதானித்துப் பார்க்கவில்லை. கணிக்கவில்லை. இக் கட்சி இந்தியாவை பா.ஜ.கவிடமிருந்து எப்படி மீட்கப் போகிறது?

தி.மு.க. அணியில் இருக்கிற கூட்டணிக் கட்சிகள் இவற்றைப் பார்த்தன. த.வெ.கவும் அணுகி வந்தது. இடதுசாரி கட்சிகள் தீவிரமாக யோசித்தன. கழகத் தலைவரைச் சந்தித்தன. கருத்துப் பரிமாற்றங்கள் நடந்தன. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நாலாவிதமான யோசனைகளைச் செய்தது. அக்கட்சியினரும் தலைவரைச் சந்திப்பதும் யோசிப்பதுமாக இருந்தார்கள். இறுதியில் இடதுசாரிகளும் விடுதலைச்சிறுத்தைகளும் த.வெ.கவை ஆதரிப்பது என்று முடிவு எடுத்தனர். கழகத் தலைவர் ஏற்கனவே குறிப்பிட்டபடி த.வெ.க. ஆட்சி அமைக்க நாங்கள் இடையூறாக இருக்க மாட்டோம் என்று தெரிவித்து இருந்தார். அதன்படியே அவர் நடந்து கொண்டார்.



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் குழப்பமில்லாமலும் தெளிவுடனும் முதலிலிருந்தே தி.மு.க. அணியில் இருப்பதையே விரும்பியது; எடுத்தும் கூறியது. இறுதியில் தமிழ்நாட்டு நலன் கருதி த.வெ.கவை ஆதரித்தது. இல்லையென்றால் த.வெ.க.112 இடங்களிலேயே இருந்திருக்கும். அரசை அமைக்க முடியாமல் போயிருக்கும். கழகத் தலைவர் ஸ்டாலின், "எங்களது கூட்டணியைச் சார்ந்த தோழர்கள் இன்றைய நெருக்கடியான சிக்கலைத் தவிர்க்க நாங்கள் தமிழக வெற்றி கழகத்திற்கு ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்தாலும், கொள்கை அடிப்படையில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்கிறோம் என்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன்" என்று கூறினார். அதன்படி 8 பேர் தி.மு.க. அணியில் இருப்பவர்கள் த.வெ.கவை ஆதரிப்பதன் மூலம் இன்று அக் கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்று இருக்கிறது.


**ஏன் த.வெ.க. ஆதரிக்க வேண்டிய நிலை தி.மு.க. அணி கட்சிகளுக்கு ஏற்பட்டது என்பதைத் தலைவர் அவரது அறிக்கையில், "ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை யாருக்கும் கிடைக்காத நிலையில், மாற்று யோசனைகளைப் பலரும் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை, தோழமைக் கட்சிகள் எந்த முடிவை எடுத்தாலும் அவர்களின் முடிவை மதித்து ஒருங்கிணைந்து செயல்பட்டு நிலையான ஆட்சி அமைய வேண்டும். இன்னொரு தேர்தலுக்கு வழி வகுத்து விடக்கூடாது என்பதே எனது எண்ணமாக உள்ளது" என்று விளக்கி இருக்கிறார்.**

ஆக, த.வெ.க. ஆட்சி என்பது தி.மு.க. அணி கட்சிகளின் மீது கட்டப்பட்ட அரியணையாகும். த.வெ.க. தனித்த பெரும்பான்மையைப் பெற்றுவிடவில்லை. ஆனால், அவர்களுக்கு ஆட்சிக்கு வந்துவிட வேண்டும். முதல்வராகிவிட வேண்டும் என்கிற ஆசை இருந்தது. தமிழ்நாட்டில் ஒரு 'தலப்பாகட்டி' சாமியார் இருக்கிறார். அவர், 'ஆசைப்படு; அடைந்துவிடு' என்று ஒரு முழக்கத்தை முழங்குபவர். சிவராத்திரியிலே 'ஆனந்த தாண்டவம்' ஆடுவார். அவர் சொல்கிறபடி எதுவானாலும் 'ஆசைப்படு; அடைந்துவிடு'என்று அடைந்து விடமுடியாது. அது அவ்வளவு எளிதானது அல்ல, என்பதை '107' என்று வந்து நின்றுவிட்டதைப் பார்த்தோம். அப்படியே தி.மு.க. அணி கட்சிகளின் ஆதரவு த.வெ.கவுக்கு தெரிவிக்காவிட்டால் 'காடாறு மாதம்; நாடு ஆறுஉமாதம்' என்ற நிலை உருவாகி இருக்கும். அவை வேறு விதமான பிரச்சினைகளை நாட்டில் உருவாக்கும்.

**'ஆசையே அலைபோலே, நாமெல்லாம் அதன் மேலே' என்றபடி ஆசையில்லாமல் வாழ்க்கை இல்லை. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய அடிப்படை அவசியமாகிறது. புத்தர் ஆசையேதான் துன்பங்களுக்குக் காரணம் என்றார். அது உண்மைதான். ஆசை வாழ்க்கையை உருவாக்கி விடும். மறுபுறம் இன்பமும் துன்பமும் மாறி மாறி வர ஏதுவாக இருக்கும். சந்தர்ப்பங்கள் கிடைக்கிற போது கூட ஆசைகள் நிறைவேறி விடுவதில்லை. ஏன்?**

வானம் தூணின்றி நிற்கிறது. அதைத்திருகுர்ஆன் அதன் வார்த்தைகளில் வெளிப்படுத்தி அழகாகச் சொல்கிறது. அதைத்தான் கட்டுரையின் தொடக்கத்தில் எடுத்துக் காட்டி இருக்கின்றோம். அதைவிட என்னால் செய்யமுடியும் எனது ஆசையை நிறைவேற்றி வையுங்கள் என்று ஒருவர் கேட்டால் அந்த ஆசை நிறைவேறுமா? சந்தர்ப்பங்கள் நிற்காது; நழுவி ஓடிவிடும். அது நிறைவேற்ற முடியாத ஆசையாகிப் போய்விடும்; ஏனெனில் அடிப்படை சரியாக இல்லை. அரசியல் என்பது அன்றன்றாட நியாயங்களைப் பேசக் கூடியது மட்டுமல்ல சிலபோது அதனால் தொலைநோக்குத் திட்டங்களும் எட்டப்போய் விடும். பதவி ஆசை மட்டும் நிறைவேறிவிடுமா? என்ன?

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



எல்லாவித அம்சங்கள் அவர்களுக்கு இருந்தன. அவர்கள் சுதந்திரப் போராட்டவீரர்கள். சென்னை மாகாணத்திற்கு முதல்வராக வர வேண்டும் என்ற ஆசைப்பட்டார்கள். அதற்குரிய சந்தர்ப்பங்கள் வாய்த்தன. எஸ்.சத்தியமூர்த்தி அய்யரும், சி.என். முத்துரங்க முதலியாரும் முதல்வராக வரமுடியவில்லை. இன்னொரு கட்டத்தில் காமராசர் முதல்வராக வேண்டும் என்று விருப்பம் உருவாயிற்று. சட்டமன்றக் கட்சி ஒருமனதாக அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை. அப்போதைய தலைவர்கள் தேர்தல் வைத்தார்கள். சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் காமராசரை அதிக வாக்களித்து வெற்றி பெறவைத்தார்கள். அந்த விருப்பம் நிறைவேற்றப்பட்டது.

அறிஞர் அண்ணாவின் மரணத்திற்குப் பிறகு நாவலர் நெடுஞ்செழியனுக்கு முதல்வராகச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரோ என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தால் ஏற்றுக்கொள்கிறேன் என்று சந்தர்ப்பங்களை நிராகரித்து விட்டார். பிறகுதான் கலைஞர் முதல்வரானார். அடிப்படை இல்லாமல் வெறும் சந்தர்ப்பங்களும் பரப்புரையும் இலக்கை அடைவதில்லை.

ஆனால் ஆசைபடுபவர்களுக்கு. 'அடைய முடியா பொருளின் மீது ஆசை தீராது அபிமானம் மாறாது' என்றாகிவிடும். தி.மு.க.வின் அணி சார்ந்த கட்சிகள் அந்த ஆசையை வெளியிலிருந்து நிறைவேற்றி இருக்கின்றன. த.வெ.க. அரியணையில் அமர்ந்துவிட்டது. தி.மு.க. த.வெ.க. ஆட்சிக்கு வர எந்த இடையூறையும் செய்யவில்லை. காலங் கருதி உதவியைத்தான் செய்து இருக்கிறது.

ஆனால் இங்கே த.வெ.கவின் வாய்ப்பு போதுமான எண்ணிக்கை இல்லாததால் எட்டிபோய் விட்டது. அதை த.வெ.க. நெருங்க வேண்டுமானால் தி.மு.க. அணியினர் ஆதரவு தர வேண்டும். அப்படி ஒரு சந்தர்ப்பம், நிலை. அப்போது த.வெ.கவினர் ஆசை எப்படி நிறைவேறும். தி.மு.க. அணியினர் சட்டம், அணியின் பொது எதிரி, மக்கள் ஆகியவற்றைப் பார்த்து ஆதரவு தந்தனர். சந்தர்ப்பங்கள் வாய்த்த போது ஆதரிக்க ஓர் அடிப்படையும் கிடைத்தது. ஆகவே த.வெ.க. ஆட்சியை அமைத்தது. சி.ஜோசப் விஜய் அரியணையை அலங்கரிக்கிறார். இப்போது அதிகார பூர்வமாக வானத்திற்கு நான் தூண் அமைக்கிறேன் என்றும் அவர் சொல்லலாம்.

தேர்தல் பரப்புரையின் போது விஜய் பா.ஜ.க.வினரை எதிர்க்க வில்லை. காங்கிரசை எதிர்க்க வில்லை. மற்ற கட்சியினர் எவரையும் எதிர்த்து அவர் பேசவில்லை. ஆனால், தி.மு.க. 'தீய சக்தி' என்று பேசினார். அரசியல் பாரம்பரியமிக்க ஒரு கட்சியைக் கிண்டலடித்துப் பேசினார். தி.மு.க. தீய சக்தியா நல்ல சக்தியா என்பதை இந்நாடு அறியும். 'தீயதும் நல்லதும் சமமாகா' என்று திருகுர்ஆன் கூறும். அதுதான் நமக்கு நினைவுக்கு வருகிறது. தி.மு.க. தீய சக்தி இல்லை. நாங்கள் எப்படி உங்களுக்குச் சமமாவோம். ஆனால் தி.மு.க. அணியின் கட்சிகள் த.வெ.கவை ஆதரித்தது என்பது அரசியல் நெருக்கடிகளினால்தான்!

அதனால்தான் கழகத் தலைவர் விளக்கம் அளித்து இருக்கிறார். த.வெ.கவுக்கு ஏன் தி.மு.க. அணியை சார்ந்த கட்சிகள் ஆதரவு அளித்தன என்பதற்கு! ஆகவேதான் காலங்கருதி த.வெ.கவுக்கு ஆதரவு தந்து ஒரு வடிவம் கொடுத்து இருக்கிறார்.

**கழகத் தலைவரே, நீங்கள் அஞ்சத் தகுந்தது ஒன்றுமில்லை. நாங்கள் உங்களோடு இருக்கின்றோம். 'களம் உன்னிடம்; காலங் கருதி கருத்தாய் வடிவம் தந்தாய்,**

**தலைவா, வாழ்க, நீ வாழ்க! வெல்க!!'** ●

டாக்டர் நல்லி குப்புசாமி – டாக்டர் வி.ஜி.சந்தோஷம் – முனைவர் ம, இராசேந்திரன் பங்கேற்பு!

## கவிதை உறவு - 54 ஆம் ஆண்டு விழா!

### முனைவர் கோ.விசுவநாதன் தலைமையேற்று விருதுகள் வழங்குகிறார்!

### ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் நூல்கள் வெளியீடு!

*சென்னை, மே 14-*

*கவிதை உறவு - வானதி பதிப்பகத்தின் 54ஆம் ஆண்டு விழா 18.05.2026 - திங்கள் மாலை 6 மணிக்கு தியாகராயர் நகர் வாணி மகால் ஜி.என்.செட்டி சாலையில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவிற்கு வி.ஐ.டி. பல்கலைக் கழக நிறுவனர் - வேந்தர் முனைவர் கோ. விசுவநாதன் தலைமை தாங்கி விருதுகள் வழங்குகிறார்.*

*விழா மலரை வெளியிட்டு டாக்டர் நல்லி குப்புசாமி வாழ்த்துரை வழங்குகிறார்.*

*மலரை பெற்று டாக்டர் வி.ஜி.சந்தோஷம் வாழ்த்துரை வழங்குகிறார்.*

*சிறந்த நூல்களுக்கு பரிசுகள் வழங்கி முனைவர் ம.இராஜேந்திரன் நிறைவுரையாற்றுகிறார்.*

*இவ்விழாவில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் எழுதிய 'திறந்த வெளிப் பள்ளிக்கூடம்' நூலை கவியருவி அப்துல் காதர் வெளியிட ஜே. பாலசுப்பிரமணியம் பெற்றுக் கொள்கிறார்.*

*ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் 'போகிற வழியில் ஒரு போதிமரம்' நூலை டி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட, அல்ஹாஜ் எச்.அகமது ருமைஸ்தீன் ஃபைஜி பெறுகிறார்.*

*டாக்டர் ஆர்.சிவகுமார் எழுதிய 'நதியில் வரைந்த ஓவியம் நூலை கவிச்சுடர் கவிதைப்பித்தன் வெளியிட யூ.எஸ். எஸ்.ஆர். நடராசன் பெறுகிறார்.*

*கவிஞர் சந்திரகேசி எழுதிய 'நீலவான நினைவுகள்' நூலை டாக்டர் சேயோன் வெளியிட முத்தையா மோகன் பெற்றுக் கொள்கிறார்.*

*இவ்விழாவில், கவியருவி தி.மு.அப்துல் காதர், டி.கே.எஸ். இளங்கோவன், பேரா.மு.அப்துல் சமது ஆகியோரின் வாழ்த்துரை வழங்கின்றனர்.*

*கவிஞர் மு. முருகேஷ் கவிதை உறவு குறித்து அறிமுக உரையாற்றுகிறார்.*

*புலவர் எஸ். மதியழகன் வரவேற்புரையாற்றுகிறார்.*

*முனைவர் வானதி இராமநாதன் நன்றி கூறுகிறார்.*

*பரிசுகள் - விருதுகளை பேராசிரியர் தமிழ் இயலன், முனைவர் கோ. கணபதி சுப்பிரமணியன் திருமதி ஸ்ரீதேவி, கவிஞர் பாளை மாணிக்கம், தொலைப்பேசி மீரான் ஆகியோர் பெறுகின்றனர்.*

*கவிதை உறவு விருதுகளை கவிச்சுடர் கவிதைப்பித்தன்- வாழ்நாள் சாதனையாளர் விருது,*

*டாக்டர் சேயோன் - கலைமாமணி டாக்டர் விக்கிரமன் விருது, கவிஞர் காவிரிமைந்தன் - கவிதைச்செல்வர் விருது, கவிஞர்தியாக ரமேஷ் - கவிதைச்செல்வர் விருது, முத்துசாமி (ஞானசி) - பதிப்புச் செல்வர் விருது, என்.எஸ். பிரேமா- மகளிர் மாமணி விருது, திருமதி டாக்டர் அ.நசீமா - மகளிர் மாமணி விருது, டாக்டர் தாமரை ஹரிபாபு -எழுத்துச்செல்வர் விருது, திருமதி மர்ளியா சக்காப்- தமிழ்மாமணி விருது, கவிஞர் சோலை தமிழினியன்- சிற்றிதழ்ச் செம்மல் விருது,ஈசநேசன் மகஸ்ரீ- ஆன்மீகச் செல்வர் விருது பெறுகின்றனர்.*

*சிறந்த நூல் பரிசுகளை கவிஞர் தவசீலன், புலவர் சு. மதியழகன், ஆழ்வார்குறிச்சி சொக்கலிங்கம், மெய் ரூஸ் வெல்ட், திருமதி சிதம்பரம்மாள் ராதாகிருஷ்ணன், இயக்குநர் பிருந்தாசாரதி, திருமதி நிர்மலா மோகன், முனைவர் கார்முகிலோன், பாரதி ராஜேந்திரன் சோரடியா, திருமதி ஸ்ரீதேவி துரையரசு, . நரேந்திரன், திருமதி கல்யாணி ஸ்ரீதர், சின்னசாமி கணேசன் ஆடிட்டர் மற்றும் முனைவர் அருணா தொல்காப்பியன் ஆகியோர் பெறுகின்றனர்.*

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர்

## வழக்கறிஞர் மகேந்திரன் மறைவு!

### குடும்பத்தினருக்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. ஆறுதல்!

நாமக்கல், மே14 –

நாமக்கல் மாவட்ட இராசிபுரம் தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளரும் வழக்கறிஞருமான மகேந்திரன் உடல்நலக் குறைவால் மறைவெய்தினார். அவரது மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, மறைந்த வழக்கறிஞர் மகேந்திரன் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நாமக்கல் மேற்கு நகரம் 18வது வார்டு பிரதிநிதி நல்லமாள் அவர்களின் கணவர் செல்லப்பன் மறைவிற்கும், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் அவர்களின் தந்தை பழனிசாமி மறைவிற்கும், அவர்களது இல்லங்களுக்கு சென்று உருவப்படங்களுக்கு மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு நகர செயலாளரும் துணை மேயருமான செ.பூபதி, பட்டணம் பேரூர் கழக செயலாளர் பொன். நல்லதம்பி, புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.ஜெயபிரகாஷ், சார்பு அணி அமைப்பாளர்கள் பொன்.சித்தார்த், ராஜவேல், முரளி, வார்டு செயலாளர் ஆனந்த், மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் வி.சி.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்ட இராசிபுரம் தொகுதி விடுதலைத் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளரும் வழக்கறிஞருமான மகேந்திரன் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார். அவரது மறைவுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, மறைந்த வழக்கறிஞர் மகேந்திரன் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு நகரச் செயலாளரும் துணை மேயருமான செ.பூபதி, பட்டணம் பேரூர் கழக செயலாளர் பொன். நல்லதம்பி, புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.ஜெயபிரகாஷ், சார்பு அணி அமைப்பாளர்கள் பொன்.சித்தார்த், ராஜவேல், முரளி, வார்டு செயலாளர் ஆனந்த், மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் வி.சி.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.